# இலக்கியப் போட்டிப் பரிசு

## [எண் 5]

*25.5.48க்குள் விடைத்தாள் அனுப்புக.*

*1.6.48இல் வெளிவரும் ஒன்பதாவது குயிலில் சரியான விடையும் பரிசு பெற்றவர் பெயரும், பரிசின் தொகையும் வெளியிடப்படும். 10.6.48இல் பரிசின் தொகை அவரவர்க்குக் கிடைக்கும்படி செய்யப்படும்.*

கட்டணம் அஞ்சற்றலைகளாக இருக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட விடை எழுதுவோர் கட்டணத்தை மணியார்டர் மூலமே செலுத்தலாம். விடைத்தாளில் அடித்தல், திருத்தல் இருப்பது கூடாது.

தனித்தாளில் எழுதி அனுப்பும் விடைகள் ஒப்புக்கொள்ளப்பட மாட்டா. குயிலில் இணைத்துள்ள தாளில் ஒவ்வொருபாட்டின் கீழேயே குறித்துள்ள முறைப்படி விடை எழுதி அனுப்ப வேண்டும்.

விடைத்தாள் ஒவ்வொன்றுக்கும் கட்டணம் நான்கு அணா அனுப்புக.

*விடைத்தாளும் கட்டணமும் அனுப்பும் முகவரி :*

**சு.மன்னர் மன்னன்,**
95,பெருமாள் கோயில் தெரு,
புதுச்சேரி.

*குயில்,15-5-48*
*இசை -1, குயில் -8*

## 4ஆவது இலக்கியப் போட்டி

### சரியான விடை

கட்டமை வில்லாக் காங்கிரஸ் கட்சிச்
சட்டமன் றுறுப்பின் தலைவர் தேர்தலில்
பைத்தியங் கொண்ட பார்ப்பன ரான
வைத்திய நாதரின் வஞ்சச் சூழ்ச்சி
பலிக்க வில்லை! பச்சைத் திராவிடப்
புலிக்கே வெற்றி போந்தது. வைத்திய
நாதர் கண்டார் நாண வில்லை
தோதுறு திராவிடர், சுப்பரா யனையும்
தீமை யில்லாக் காமரா சரையும்
ஓமந் தூர்இ ராமசா மிக்குப்
பகைவர் ஆக்கப் பார்த்தார்
வகையிலாச் சூழ்ச்சியும் மண்ணா யிற்றே

குயில், 1-4-48
இசை-1, குரல்-7

### பரிசு பெற்றவர் விவரம்

போட்டியில் கலந்து கொண்டவர்கள் 31 பேர்கள். கூடிய தொகை (31 X4 அணா) ரூ 7-12-0. அவர்களில் 8 விடைகட்கு 5 சரியான விடை எழுதியவர்கள் இருவர்.

நடராசன், சலிவன் தெரு, கோவை.

குப்புசாமி, சைதாப்பேட்டை, சென்னை.

தலைக்கு ரூ 3.14க்குரிய கவிதைப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

குயில், 15-5-48
இசை-1, குரல்-8

# இலக்கியப் போட்டி

## [எண் 6]

*இட்டடி நோக எடுத்தடி கொப்புளிக்க*
*வட்டில் சுமந்து மருங்கசைய(க்)*

என்ற அடிகள் அம்பிகாபதியால் பாடப்பெற்றவை.

இதனைக் கம்பர்,

*------------------------------------ '-கொட்டிக்*
*கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில்*
*வழங்கோசை வையம் பெறும்'*

என்ற இரண்டு அடிகளைப் பாடி முடித்தார். இவ்விரண்டு அடிகளும் கம்பராலன்றி அம்பிகாபதியாலேயே பாடிமுடிக்கப் பெற்றிருப்பின் - எப்படி அமைந்திருக்கும் என்பதனை அஞ்சலட்டை ஒன்றில் எழுதியனுப்ப வேண்டும். அவற்றுள் சிறந்ததென, ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப்படுவதை எழுதியவர் எவரோ அவருக்கு ஓராண்டு 'குயில்' இலவசமாக அளிக்கப்படும். இந்த (இளங்கவிஞர்களை ஊக்குவிக்கும்) தமிழ்த் தொண்டைச் செய்ய முன்வந்தவர் மாயூர வட்ட, மேமாத்தூர் நிலக்கிழார் செள. வாசுதேவன் அவர்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் பாட்டுடன் சிறந்தனவாக உள்ளனவும் குயிலில் அச்சிடப்பெறும்.

முடிவு தேதி 23-7-59
.அனுப்ப வேண்டிய முகவரி:
இலக்கியப்போட்டி
குயிலகம்- புதுச்சேரி

குயில்
7.7.59, 14.7.59

# இலக்கியப்போட்டி முடிவு

இட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசையக் - கட்டிக்
கரும்பன்ன சொல்லாள் கடைக்கணருள் செய்தாள்
அரும்பன்ன மூரல் அவிழ்த்து.

அம்பிகாபதி பாடியனவாகச் சொல்லப்படும் முதல் இரண்டடிகளை வைத்து- தனிச் சொல்லையும் பின்னிரண்டடிகளையும் சேர்த்து முடிக்கும்படி கேட்டிருந்ததில்,

மிகப்பலர் அவ்வாறே விடை எழுதியிருந்தார்கள். அவற்றில் வி. அரங்கநாதன் (32, கவரைத் தெரு, தாராசுரம்) அவர்களின் (விடை) தனிச்சொல்லும் பின்னிரண்டடிகளும் சிறந்தவை என நாம் தீர்ப்பளிக்கின்றோம்.

இட்ட அடிகள் நோகத் தூக்கிய அடிகள் இட்டு நலிவுற்றதால் கொப்பளிக்கவட்டில் சுமந்ததால் இருப்பு, அழகுற அசைய இவ்வாறு காட்சியளித்த கட்டிக் கரும்பு போன்ற சொல்லுடையாள், சொல்லுடையாளாயிருந்தும் கடைவிழியால் எனக்கு அருளைச் செய்தாள் அவளின் முல்லையரும்பு போன்ற வெள்ளெயிற்றைப் பொதித்த இதழ்ப்போது அவிழ்த்து.

கட்டிக்கரும்பு என்றதில் கட்டி என்பது இயற்கை அடை. கரும்பன்ன, அரும்பன்ன முதலெழுத்துத் தவிரச் சீரின் எல்லா எழுத்துக்களும் ஒன்றி வந்த எதுகை.

கரும்பன்ன என்பதற்கு அதே அடியில் கடைக்கண்(க) மோனை! அரும்பன்ன என்பதற்குக் கடைச்சீரின் அவிழ்த்து (அ) மோனை.

கட்டிக்கரும்பு போல் பேச்சுடையாள் அப்பேச்சைக் கருவியாகக் கொள்ளாமல் கடைக்கணித்தலையே தன் காதலைத் தெரிவிக்கக் கருவியாக்கிக் கொண்டாள் என்பார் கரும்பன்ன சொல்லாள் கடைக்கணருள் செய்தாள் என்று நயம்படக் கூறினார்.

இட்டடி நோக என்பது இட்டடி நோவ என்றும் பாடம் உண்டு. வட்டில் சுமந்த மருங்கு என்றும் பாடம் உண்டு.

இவ்விலக்கியப் போட்டிக்கென வந்த பாக்கள் 682. அவற்றிற் பல வெண்பா இலக்கணத்திற்குப் புறம்பானவைகளாக இருந்தன. சில எழுத்துப் பிழைகளுடன் காணப்பட்டன. சில அஃறிணையிலேயே முடிக்கப்பெற்றிருந்தன. இன்னும் சில கண்ணியமற்ற சொற்களால் புனையப் பெற்றிருந்தன. எனவே பரிசுக்குரியதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டதை மட்டும் வெளியிட்டுள்ளோம்.

இப்போட்டியை நிறுவிய மாயவரம் வட்டமேமாத்தூர் நிழக்கிழார் திரு.சௌ.வாசுதேவன் அவர்கட்குக் குயிலின் சார்பாகவும், தமிழ்ப் பெருமக்களின் சார்பாகவும் நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமைச்சர்

குறிப்பு : வெற்றி பெற்றவர்க்கு இந்த இதழ் முதல் ஓராண்டு 'குயில்' இலவசமாக அனுப்பப்படுகிறது.

குயில், 29 - 9 - 59.

# செய்திகள்

# இது செய்தி

புதுவை மாநிலப் பிரதம கமிஷனர் திரு.எம்.கே.கிருபாளானி இன்று ஒரு புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

மேற்படி கண்காட்சி பிரெஞ்சுப் பிரதிநிதி சபை சார்பிலும் இலையான்சு பிரான்சிசு சார்பிலும் நடத்தப்பட்டது.

பிரான்சின் தற்காலச் சிற்ப வேலைகள், சர்க்கார் மாளிகைகள், மாதாக்கோயில்கள், விடுகள், பள்ளிக்கட்டடங்கள் முதலியவை பற்றிய 46 புகைப்படங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

★ ★ ★ ★ ★

தமிழ்நாட்டிலிருந்து கேரளா அரிசி வாங்கிச் செல்வது பற்றிக் கேரளச் சட்டசபையில் கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையில் 'தனிப்பட்ட வியாபாரிகள் தஞ்சை அரிசியை வாங்கி வருவதற்குத் தடையெதுவும் கிடையாது. அரசாங்கம் வாங்குவது அவசியம் என்று [illegible]ந்தப்பட்டால் மண்டலக் கவுன்சில் கூட்டத்தில் அதுபற்றி விவாதிக்கப்படும்' என்று கேரள முதல் மந்திரி கூறியிருக்கிறார்.

★ ★ ★ ★ ★

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் புதிதாகக் கட்டப்பட்ட நகரசபை ஆரம்பப் பள்ளியைத் திறந்து வைத்த கல்வி மந்திரி சி.சுப்பிரமணியம் நடப்பு ஆண்டில் ஏறக்குறைய ஐந்து லட்சம் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசப் பகல் உணவு தருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார்.

கடந்த ஆண்டில் 2 லட்சத்து 28 ஆயிரம் ஏழைப்பிள்ளைகட்கு இலவசப் பகல் உணவு கொடுக்கப்பட்டதாம்.

★ ★ ★ ★ ★

பரப்பிக்குளம் நீர்த்தகராறைப் பஞ்சாயத்துக்கு விடுவது என்ற கேரளாவின் வாதத்துக்குச் சென்னை விளக்கந் தந்திருக்கிறது.

பரப்பிக்குளம் நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றிக் கேரளாவுக்கும் சென்னைக்கும் ஏற்பட்டுள்ள தகராறைப் பஞ்சாயத்துக்கு விடுவது பற்றிச் சென்னை சர்க்காருக்கு எவ்வித ஆட்சேபமுமில்லை.

இந்தத் தகராறைத் தீர்த்து வைக்க டெல்லியின் முடிவை நாங்களும் ஏற்றுக் கொள்ளுகிறோம்.

இவ்வாறு முதன்மந்திரி காமராசர் நிருபர்களிடம் கூறியிருக்கிறார்.

★ ★ ★

இலங்கையில் 100க்கு 68 வீதம் சிங்களவர் வசிப்பதனால் சிங்கள மொழியே ஆட்சி மொழியாக இருக்கும். அதனோடு சம இடத்தைத் தமிழ் மொழிக்குக் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் குழப்பம் உண்டாகும்.

இவ்வாறு இலங்கைச் சட்டசபையில் பிரதமர் பண்டார நாயகர் பேசியிருக்கிறார்.

அரசாங்க வேலைகளில் நியாயமான அளவுக்குத் தமிழ் மொழியை உபயோகிப்பாராம்.

அண்மையில் நடந்த பெருங்கலவரத்தின் காரணமாக சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பத்துப்பேரையும் விடுதலை செய்தால் மீண்டும் பயங்கரக் கலகம் வருமாம்.

★ ★ ★

அங்கேரிப் பிரதமர் திரு.நாகியையும் அவரது துணைவர்களையும் கொலை செய்த கம்யூனிச ஆட்சி அவரது நெருங்கிய நண்பர்கள் சிலரையும் மறைமுகமாக விசாரணை செய்கிறதாம்.

★ ★ ★

சேரிகளில் வாழும் மக்களுக்கு ஆத்மீக நலன்கள் கிடைக்க வேண்டுமாம். கோயில் இல்லாத சேரிகளில் சிறுகோயில் ஒன்றைக் கட்டப் பெரிய கோயில்களின் உபரிவருமானத்திலிருந்து பொருள் உதவி செய்வதையும் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நிறைவேற்ற வேண்டிய திட்டங்களோடு ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம்.

புதிதாகக் கட்டப்படும் கோயிலில் பூசை செய்யச் சேரிவாசிகளில் ஒருவருக்குப் பயிற்சியளிக்க வேண்டுமாம். இப்படிக்கு இந்து தர்மப்பிரசார சங்கமாம்!

குயில், *15.7.58*

# செய்திகள்

## வெளிவராத விளம்பரம் :1

## குத்துச்சண்டை

நிகழிடம் : கேரளம்

பங்கு

கம்யூனிஸ்ட் பிற கட்சிகள் (முக்கியமாக காங்கிரஸ்)

காலம் : கடந்த சில காலம்

### நடைபெற்றவை

போலீஸ் அடக்குமுறை, தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம், முந்திரித் தொழிலாளரிடைத் துப்பாக்கிச் சூடு. கம்யூனிஸ ஆட்சியின் அடக்குமுறைகளைக் கண்டித்த அடையாள வேலை நிறுத்தம், 350 பேருக்கு மேல் மாணவர்கள் கைது, இன்ன பிற...

விதிகள்
கட்டணம் } கிடையாது

நடக்க இருப்பவை : எதிர்பாருங்கள்

குறிப்பு : தலைவர்கள் விருப்பம்போல் நிகழ்ச்சிகள் மாற்றப்படும்.

குயில், 5-8-58
குரல்-1, இசை-10

# தலை வலிக்கிறது

கேரளாவில் எதிர்க்கட்சி அரசு நடைபெறுகின்றதென்பதைக் காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் வரவேற்றன.

அங்குள்ள கம்யூனிச ஆட்சிக்குத் தலைவலி கண்டிருக்கின்றது. இப்போது ஒரு காங்கிரஸ்காரர் 'கம்யூனிச சர்க்காரின் முடிவுக் காலம் ஆரம்பமாகிவிட்டது' என விமரிசனம் செய்திருக்கின்றார்.

முந்திரி தொழிலாளரிடையே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டை எதிர்த்து 30 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கோவையில் அடையாள வேலைநிறுத்தம் செய்திருக்கின்றார்கள்.

கேரள முதன்மந்திரி அங்கு நடைபெறும் நேர்மையற்ற செயல்கள் காங்கிரஸ் ஆதரவாளர்களாலேயே நடைபெறுகின்றன என்று புகார் செய்துள்ளார். அதற்குள்ளாகவே கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கே 'கேரளாவில் மீண்டும் துப்பாக்கிச்சூடு நடைபெறுவதைத் தடுக்க அங்குள்ள கம்யூனிஸ்ட் அரசாங்கம் தவறுமானால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதற்குப் பதவி விலகக் கட்டளையிடும்' என்றும் கூறியிருக்கின்றார்.

நாளை நடப்பதை யாரறிவார்?

நாடகமே உலகம்...?

*குயில், 5-8-58*
*குரல்-1, இசை-10*

# தொண்டு

இலங்கையில் தமிழை நியாயமான அளவு உபயோகிக்க வசதி செய்யும் மசோதா ஒன்று அடுத்த 7ஆம் தேதி சட்டசபையின் ஆய்வுக்கு வர இருக்கிறதாம்.

இலங்கை புத்த குருக்களின் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சிலர் இம்மசோதாவின் சில பிரிவுகளைக் கண்டிக்கிறார்களாம்.

புத்த குருக்கள் கட்சியின் மத்தியக்குழு அண்மையில் கூடி இரு தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறதாம்.

நெருக்கடி நிலைமையில் இம்மசோதாவை நிறைவேற்றச் செய்யும் முயற்சியைக் கண்டிக்கிறதாம் ஒன்று.

சட்டசபையில் மசோதாவைக் கொண்டு வருமுன் அதன் பிரதியைக் கட்சிக்கு அனுப்பாததைக் கண்டிக்கிறதாம் மற்றொன்று.

**குயில், 5-8-58**

குரல்-1, இசை-10

# நல்வழி

அரபு நாடுகளில் ஏற்பட்ட பயங்கரக் குழப்பத்தின் காரணமாக எந்த நேரத்திலும் உலகப்போர் மூளலாம் என அஞ்சிக் கிடந்த நிலை மாற ஒரு நல்வழி ஏற்பட்டிருக்கின்றது.

உலகத்தலைவர்கள் மாநாடு இத்திங்கள் இரண்டாவது வாரத்தில் நடைபெறவிருக்கிறதாம்.

இந்தியப் பிரதமர் நேரும் இதில் கலந்து கொள்ளப் போகிறார்.

***குயில், 5.8.58***
*குரல்1, இசை 10.*

# விதி?

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு மடாதிபதி சாப்பாட்டுக்காக மாதம் ரூ.15 பணஉதவி கொடுக்கிறாராம். அதற்காகச் சில நிபந்தனைகள் விதித்திருக்கிறாராம்.

1. நெற்றியில் விபூதி பூச வேண்டும்.
2. மதக்கட்டுப்பாட்டிலிருந்து தவறக்கூடாது.
3. திங்கட்கிழமைதோறும் வார வழிபாட்டில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.
4. வராத நாட்களில் நாள் ஒன்றுக்கு எட்டணா வீதம் உத்வித்தொகையில் பிடித்துக் கொள்ளப்படும்.
5. கண்ட இடங்களுக்கும் போகக் கூடாது.
6. எப்போது கேட்பினும் கந்தர்கலி வெண்பாவைப் பாராமல் ஒப்பிக்க வேண்டும்.
7. எல்லாப் பாடங்களிலும் 100க்கு 50க்கு மேல் மதிப்பெண் பெறவேண்டும்.
8. எந்த அரசியல் கட்சிகளிலும் பங்கு கொள்ளக்கூடாது. இவையே அவைகளாம்.

ஐயோ! விதியே! மடஅதிபதியே!

குயில், 29.7.58
குரல்-1, இசை-9

# மாசுக்குள் மதி

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவில்லை.

தமிழ்நாடு 27-9-60 ஒரு தலைப்பு.

இந்தத் தலைப்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு என்பது வரைக்கும் சரி! இல்லை என்பது ஆராயத்தக்கது.

* * * * *

உணவுச் சிக்கலைவிட இப்போது சென்னை மாகாணத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயரிடுவது முக்கியமல்ல.

இது காமராசர் சொன்னது.

உணவுச் சிக்கலும் தீரவேண்டியதுதான். அதற்கு முன்னமே தீர்ந்திருக்க வேண்டும் தமிழ்நாடு என்ற பெயர் பற்றிய சிக்கல்.

* * * * *

பக்தி இல்லாதவன் வாழமுடியும் என்பதற்கு நானே எடுத்துக்காட்டு.

இது பெரியார் சொன்னது.

பக்தி உள்ளவன் சாகமுடியும் என்பதற்குத் திருஞான சம்பந்தர் முதல் பற்பலர் எடுத்துக்காட்டு.

*வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.*

இது திருவள்ளுவர் சொன்னது.

பார்ப்பான் சொல்லும் வகையே நடந்தால் தெய்வ வரிசையில் வைத்து எண்ணப் படுவான் என்ற பார்ப்பனர்களை நோக்கி அதற்கு உலகில் வாழும் முறைப்படி வாழ்ந்தாலே போதும் என்று கூறினார். தெய்வ வரிசையில் வைக்கப்படுவதை அவர் வற்புறுத்த வரவில்லை. வாழும் முறைப்படி வாழ வேண்டும் என்பதை வற்புறுத்தினார்.

* * * * *

**குயில், 4-10-60.**

447
திருச்சிராப்பள்ளி,
620 024.
...லைக் கழகம்.

# புதுவைச் செய்தி!

## குயில் 14-6-60

**புதுவையில் பட எரிப்பு!**

'நாம் தமிழர்' இயக்கத்தைச் சார்ந்த தமிழநம்பி (கிருஷ்ணராஜ்) கூட்டத்தில் எந்தப் பிளவும் இல்லை.

புதுவைத் திராவிடர் கழகத்தினரில் கனகலிங்கம் கூட்டம் என்றும், நோயேல் கூட்டம் என்றும், தமிழ்த் தொண்டன் கூட்டம் என்றும் மூன்று பிரிவுகள் உண்டு.

தமிழ நம்பி (இவர் தினத்தந்தி ஏஜெண்டு) தம் கூட்டத்தோடு படம் எரிக்கப் போவதாக முன்கூட்டியே, அரசினர்க்கும் பொது மக்களுக்கும் அறிவித்திருந்தார். அவரை எதிர்த்துப் புதுவைக் காங்கிரசைச் சேர்ந்த காலிகள் மிரட்டல் துண்டு அறிக்கை வெளியிட்டிருந்தார்கள்.

படஎரிப்பு நாள் காலையில் ஷெ தமிழநம்பியையும், பழநியையும் [illegible] ஆட்கள் பட்டப்பகலில் மக்களறியப் போலீசு இன்ஸ்பெக்டர் சின்னசாமி ஐயர் முன்னிலையில் நினைவு இழக்கும் வரைக்கும் தாக்கினார்கள்.

[illegible] தமிழ்த்தொண்டன் கூட்டத்தைச் சேர்ந்த இருவரும் தாக்கப்பட்டதாகக் கேள்வி.

இதிலோர் அருவருக்கத்தக்க செய்தி என்னவெனில், நாம் தமிழர் இயக்கத் தமிழநம்பி முதலியவர்களையும், தமிழ்த் தொண்டனைச் சேர்ந்த இருவரையும் தாக்கப் போவதைத் திராவிடர் கழகத்தைச்

சேர்ந்த கனகலிங்கமும், நோயேலும் ஆதரித்தார்கள்; ஆதரித்தும் வருகின்றார்கள் என்பதே.

படம் எரித்ததற்காக மொத்தம் 12 பேர்களுக்குத் தலா 25 பிராங் வீதம் தண்டனை செய்து வெளியில் அனுப்பினார்கள் அரசினர்.

தமிழநம்பி பற்றி வழக்கு நடைபெறும். அவர் சிறையினின்று தற்காலிக விடுதலை பெற்றிருக்கின்றார்.

தாக்கிய காலிகளைச் சிறைப்படுத்தியது போல் காட்டி உடனே வெளியில் விட்டுவிட்டார்கள் என்று சொல்லப்படுகின்றது.

புதுவை அரசினர்க்கு அறிவும், ஆண்மையும் இருந்தால், சட்டத்தைப் பாதுகாப்பதில் அவர்கள் பொறுப்பு காட்டவேண்டுமே தவிர, காலிப் பசங்களைக் கொண்டு இவ்வகைச் செயல் செய்வதை ஆதரித்தது சரியல்ல.

★ ★ ★ ★ ★